| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 219/2024 |
| நாள் | 07.02.2026 |
| பெயர் | ராஜசேகர் |
| தந்தை பெயர் | அக்குரூவர் |
| வயது | 65 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் நன்றாக படிக்க தெரியும். கடந்த 2010 ஆம் ஆண்டு நான் என்ன தொழில் செய்து வந்தேன் என்றால் கண்ணாடி கடை வைத்திருந்தேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்தேனா என்றால் இல்லை. 2011ஆம் ஆண்டு கிரைய சொத்தில் முன் முந்தைய ஆவணத்தில் 6495/1942 என்பது என்னுடைய முந்தைய ஆவணம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொத்தை வாங்குவதற்கு முன்பு 1942 பத்திரத்தை நான் நன்றாக படித்துப் பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். வில்லங்கமும் போட்டேன். ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு தான் சொத்தை வாங்கினேன். 1942 பத்திரத்தில் லலிதா பாய்க்கு கிரையம் கொடுத்த கிருஷ்ணசாமி முதலியாருக்கு சர்வே எண் 13 இல் மொத்தம் மூன்று ஏக்கர் 87 சென்ட் பாகப்பிரிவினை மூலமாக பெறப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மூனு ஏக்கர் 87 சென்ட் இடத்தில் இருந்து கிருஷ்ணசாமி முதலியார் 1936 இல் துரைசாமி முதலியார் என்பவருக்கு 20 சென்ட் நிலமும் 1942 ல் லலிதா பாய் அம்மாளுக்கு 18 அரை சென்ட் நிலமும் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 1936 இல் கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள் துரைசாமி முதலியாருக்கு கிரையம் கொடுத்த சொத்திற்கும் நான் கிரையம் பெற்ற சொத்து இருக்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பிரமாணம் ஆகும் மூலத்தில் பத்தி 4 ல் 1942 பத்திரத்தில் நான்கு எல்லைகள் தெளிவாக குறிப்பிட்டுள்ளதாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 3 ன் படி அந்த நான்கு எல்லைகள் குள்ளப்ப நாயக்கர் தெருவிற்கு மேற்கு, தெய்வானை அம்மாள் வீட்டிற்கு வடக்கு, சர்வே எண் 15,16 எண் பட்டா நிலத்திற்கு கிழக்கு, வேணுகோபால் முதலியார் காலி மனைக்கு தெற்கு என்று உள்ளது என்றால் சரிதான். அந்த நான்கு

எல்லைகளில் ஏதாவது ஒரு எல்லையாவது ஆற்காடு ரோடு என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் ஆற்காடு ரோடு என்று குறிப்பிடப்படவில்லை. என்னுடைய 2011 ஆம் ஆண்டு பெறப்பட்ட கிரைய பத்திரத்தில் சொத்தின் நான்கெல்லை விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 2012ல் நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 221/2012 (Renumbered as 371/2024) லும் நான்கெல்லை விவரங்கள் குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண் போட்டு அதை தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா ஆ 20 ன் படி சென்னை உயர் நீதிமன்ற TOS No. 4/1939 உத்தரவில் மொத்தம் ஒன்பது ஐட்ட சொத்துக்கள் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அதில் ஐந்தாவது ஐட்டம் சொத்து விவரம் 23 நெட்டேரி கிராமம் சர்வே சர்வேஎண் 13 மொத்த விஸ்தீரணம் 19 சென்ட் காலி நிலம் என்று அதில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வாதி கோதை என் மீது காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஆஜராகி மேற்படி பிரச்சனையை உரிமையியல் நீதிமன்றம் நாடி தீர்த்துக் கொள்கிறோம் என்று நான் வாசாஆ 12–ல் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் கடந்த 15.10.2012 ஆம் தேதி வாதி கோதை மீது மற்றும் சந்திரசேகரன் என்பவர் மீதும் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண் 221/2012 என்ற வழக்கு தாக்கல் செய்து அது தற்போது நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 371/2024 ஆக நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போதே 11.01.2013ஆம் தேதி காஞ்சிபுரம் வருவாய் கோட்டாட்சியர் இடம் வாதி பேரில் உள்ள டவுன் சர்வே ஃபீல் ரிஜிஸ்டர் ரத்து செய்ய நான் புகார் கொடுத்தேன் என்றால் அந்த தேதியில் லலிதாபாய் பெயரில் இருந்ததை மாற்றியதால் நான் ரத்து செய்யக்கோரி மனு கொடுத்தேன். அந்த மனுவில் நிலுவையில் இருந்த வழக்கு தொடர்பாக கூறாமல் அதை மறைத்து வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்தேன் என்றால் லலிதாபாயின் பெயர் தவறாக மாற்றப்பட்டுள்ளதால் பெயர் மாற்றம் செய்ய மனு கொடுத்தேன். 2012 ம் ஆண்டு நான் தாக்கல் செய்த வழக்கும் 2014இல் வாதி கோதை என் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கும் நிலுவையில் இருக்கும் போது 2015 ஆம் ஆண்டு 2ம் பிரதிவாதிக்கு நான் பொது அதிகார பத்திரம் கொடுத்தேன் என்றால் சரிதான். 13.12.2012 பி.வா.சா.ஆ 26 ன் படி வாதி கோதை எனக்கு கொடுத்த வழக்கறிஞர் கடிதத்திற்கு நான் பதில் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் பி.வா.சா.ஆ 17 ன் படி 15.9.2010 தேதியிட்ட வாடகை பத்திரம் ஒன்றை லலிதா பாய் அவர்கள் சந்திரசேகரன் என்பவருக்கு எழுதி கொடுத்ததாக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை பற்றி என்னுடைய பதில் அறிவிப்பில் ஏதேனும் கூறியுள்ளேன் என்றால் இல்லை. அப்போது வாடகை தாரர்கள் இல்லை. அதனால் சொல்லவில்லை. பி.வா.சா.ஆ 17 ன் படி ஆவணம் லலிதாபாய் இறப்பிற்கு பின்பு நான் ஒரு போலியான ஆவணத்தை தயாரித்து போலியான முத்திரைத்தாளும் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்து குறியீடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 02.05.2014 ம் தேதி வா.சா.ஆ 16 ஆவணம் வருவாய் கோட்டாட்சியர்

உத்தரவு முன்பாக ஏதேனும் வரி, ரசீது அல்லது மின்சார கட்டணமும் நான் செலுத்தி ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி உத்தரவுக்கு பின்பு உள்ள ஆவணங்களை தான் நான் இந்த வழக்கில் குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். வருவாய் கோட்டாட்சியர் உத்தரவையும் மாவட்ட வருவாய் அதிகாரியின் உத்தரவையும் சென்னை உயர்நீதிமன்றம் நீதி பேராணை எண் 4338/2022 கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, 29.07.2024 இன் படி ரத்து செய்தது என்றும், என்னிடம் காட்டப்படும் உத்தரவு தான் உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. என்னுடைய பிரமாண வாக்கு மூலத்தில் மேற்படி உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு எண் 3128/2024 ல் மேல்முறையீடு செய்ததாக கூறியுள்ளேன் என்றும், அது சம்பந்தமான ஆவணம் பி.வா சா.ஆ 24 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டில் ஸ்டேட்டஸ் கோ உத்தரவு வழங்கியதாக நான் கூறியுள்ளேன் என்றும் உண்மையில் அவ்வாறு உயர்நீதிமன்றத்தால் எந்த உத்திரமும் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 34 ன் படி நெட்டேரி கிராமத்தில் உள்ள எப்.எம்.பி ஸ்கெட்ச்சில் சர்வே எண் 13 அருகில் கிழக்கு திசையில் சர்வே எண் 15 மற்றும் 16 உள்ளதா என்றால் இந்த வரைபடத்தில் உள்ளது. கிழக்கு பக்கத்தில் உள்ள சர்வே எண் 15 மற்றும் 16 தான் 1942 லலிதாபாய் அம்மாளின் கிரைய ஆவணத்தில் கிழக்கு திசை எல்லையாக குறிப்பிட்டுள்ளது என்றால் நான்கு எல்லைகள் பற்றி எனக்கு தெரியவில்லை என்னுடைய சர்வே எண் 13/1AC என்பது தான் எனக்கு தெரியும். என்னிடம் இடத்தை ஒப்படைக்கும்போது பட்டா மற்றும் வரைபடத்தின் படி அந்த இடத்தை தான் சர்வே செய்து ஒப்படைத்தார்கள் என்று சாட்சி தாமாக முன்வந்து சொல்கிறார். என்னுடைய நிலம் சர்வே செய்ததை பற்றி நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் எந்த ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்பது தெரியவில்லை. இந்த வழக்கில் இடைக்கால மனு எண் 11/2025 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு எதிர்த்து தாக்கல் செய்த சிராய்வு மனு எண் 5379/2025 மனு வானது தள்ளுபடி செய்யப்பட்டு இந்த வழக்கை விரைந்து தீர்வு செய்ய வேண்டும் என்று உத்தரவு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அது வா சா ஆ 39 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1942 ல் லலிதாபாய் சொத்திற்கும் இந்த வழக்கு சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், வாதியின் வழக்கை அனுமதித்து நான் தாக்கல் செய்த வழக்குகளை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

(Sd/- Deepthi Arivunithi, M.L.,)
Principal District Court,
Kancheepuram.